ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1797/24 - 2013 පෙබරවාරි 15 වැනි සිකුරාදා - 2013.02.15
*1797/24 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் காணியின் விபரம் :

பதுளை மாவட்டத்தில் பதுளை பிரதேச செயலாளர் பிரிவில், பதுளை மாநகர சபை எல்லைக்குட்பட்ட வட்டார இல. 07 வெலேகடயில் அமைந்துள்ள அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. ப/637 மற்றும் 2013/01/21 ஆந் திகதிய பூர்வாங்க வரைபடத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள 0.1288 ஹெக்டயார் விஸ்தீரணமான குடாமுத்தெட்டுவ என்ற காணியின் எல்லைகள் :

01. **துண்டு இல. 1 - குடாமுத்தெட்டுவ - விஸ்தீரணம் : 0.1288 ஹெக்டயார்**

வடக்கு : வி. கே. சிவசுப்பிரமணியத்திற்குச் சொந்தமான குடாமுத்தெட்டுவ ; கிழக்கு : வி. கே. சிவசுப்பிரமணியத்திற்குச் சொந்தமான குடாமுத்தெட்டுவவும் மு.பி.ப 229 இன் துண்டு இல. 1 உம் 2 உம் ; தெற்கு : மு.பி.ப 229 இன் துண்டு இல. 1, 2 உம் பாதையும் ; மேற்கு : கெப்படி பொல வீதி.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 06 ஆந் திகதி பி. ப. 02.30 மணிக்கு பதுளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

காமினி மஹிந்தபால ஜோபியஸ்,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2013.02.11.

03 - 230